காவல் இணை ஆணையாளர், மேற்கு மண்டலம், சென்னை பெருநகர காவல்,
அவர்களின் செயல்முறை ஆணை

முன்னிலை :B.விஜயகுமாரி இ.கா.ப.

ந.க.எண். ப.பி.1(1)/ 57/1576/2020
மே.ம.ஆ.எண் - 395/2020 நாள். 26.06.2020

பொருள்: சென்னை பெருநகர காவல் - மேற்கு மண்டலம் - பணிப்பிரிவு - கருணை அடிப்படையில் பணி நியமனம் - திருமதி பா.கௌரி, இளநிலை உதவியாளர் பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்குதல் தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண்.220/காவல் 15 நாள்.18.02.2016.
2. அரசாணை (நிலை) எண்.80 நாள்.02.03.2016 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ-1)த்துறை, நாள் 02.03.2016

""""

த.சி.கா 2ஆம் அணியில் வான்தந்தி பிரிவில் காவலராக பணிபுரிந்த நாய்க்-3086, திரு. பாஸ்கரன் என்பவர் பணிக்காலத்தில் 30.01.1999 அன்று மறைந்ததால் அவரின் மனைவி திருமதி. பா. கௌரி, என்பவர் வேலை கோரி 07.05.1999ஆம் தேதி மனு சமர்ப்பித்திருந்தார். நியமனதாரர் விண்ணப்ப நாளில் பி.காம் வரை படித்திருந்ததால், இக்கல்வித் தகுதியின் அடிப்படையில் இவர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அனுமதி பெற்ற இளநிலை உதவியளராக பணிநியமனம் செய்யலாம் என்ற கருத்துரு காவல் துறை இயக்குநருக்கு அனுப்பப்பட்டு, அன்னாருக்கு கணினி விவர பதிவாளர் பணி வழங்கப்பட்டு 10.09.2005 முற்பகல் முதல் சென்னை பெருநகர காவல் இணை ஆணையாளர், மேற்கு மண்டலத்தில் பணிக்கு அறிகை செய்து பணிபுரிந்து வந்துள்ளார். 01.05.2007 முதல் கணினி விவர பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. பின்னர் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டு 24.08.2018 பிற்பகல் இவ்வலுவலகத்தில் இருந்து விடுவிக்கப்பட்டு, சென்னை பெருநகர காவல், காவல் ஆணையாளர் அலுவலகத்தில் 27.08.2018 முற்பகல் பணிக்கு அறிக்கை செய்து பணிபுரிந்து வந்தார். பின்னர் பணிமாறுதலில் 12.06.2019 முற்பகல் மேற்கு மண்டல காவல் இணை ஆணையாளர் அலுவலகத்தில் பணிக்கு அறிக்கை செய்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

2) கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்ற அரசு பணியாளர்களின் பணியினை வரன்முறைப்படுத்துவதில் பல்வேறு காரணங்களால் ஏற்படும் காலதாமத்தினை கருத்திற்கொண்டு 01.02.2016 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எவ்வித விதி தளர்வும் தேவைப்படாத அணைத்து பணியாளர்களின் பணிநியமனத்தை சம்பந்தப்பட்ட நியமன அலுவலரே பணிவரன்முறை செய்து ஆணையிடலாம் என பார்வை இரண்டில் காணும் அரசாணையில் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

3) திருமதி. B. கௌரி, தற்காலிக இளநிலை உதவியாளர், காவல் ஆணையாளர் அலுவலகம், சென்னை பெருநகர காவல் என்பவர் உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அன்னாருடைய பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் 27.08.2018 முற்பகல் முதற்கொண்டு பணிவரன்முறைப்படுத்தி இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

ஒம்/-B. விஜயகுமாரி,
காவல் இணை ஆணையாளர்,
மேற்கு மண்டலம்.

பெறுநர்:

திருமதி. B. கௌரி, இளநிலை உதவயாளர்,
- மேற்கு மண்டலம், சென்னை பெருநகர காவல்.

நகல்:

காவல் துறை தலைமை இயக்குநர், தமிழ்நாடு, சென்னை -04
காவல் ஆணையாளர், சென்னை பெருநகர காவல், வேப்பேரி, சென்னை -07.
மண்டல ஆணை புத்தகம் மற்றும் நகல் -1

3/1/2020

முதுநிலை நிர்வாக அதிகாரி,
மேற்கு மண்டலம்.

3/